வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.04.2025 சனிக்கிழமை இதழ் : 103 பக்கங்கள் : 12




*18 உள்ளூராட்சி சபைகளில்*

# தேர்தலுக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீக்கம்!

## நிராகரித்த வேட்புமனுக்களையும் ஏற்க உத்தரவு

கொழும்பு, ஏப்ரல் 12

**கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளூராட்சி சபைகளில் எதிர்வரும் மே 6ஆம் திகதி தேர்தல் நடத்த விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.**

அத்துடன், 18 உள்ளூராட்சி மன்றங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

சட்ட மா அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் முகமது லாபர் தாஹிர், பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதி பதிகள் ஆயம் இந்த உத்தரவுகளை வழங்கியது. (ஐ)

## இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு குழுவில் முன்னிலையாவேன்!

### முன்னாள் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஏப். 12

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் எதிர்வரும் 17ஆம் திகதி முன்னிலையாக தயாராக உள்ளேன் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த சாமர சம்பத் தசநாயக்க, பாடசாலை மாணவர்களுக்கு புத்தக பை வழங்குவதற்காக 11

## அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 12

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்துக்காகவே அவர் இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வரும் 11

## மாவை கந்தனுக்கு 50 ஆண்டுகளின் பின்னர் நேற்று மகா கும்பாபிஷேகம்!

படம் - ஐ. சிவசாந்தன்



யாழ்ப்பாணம், ஏப். 12

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதம குரு இரத்தினசபாபதி குருக்கள் தலைமையில் கிரியை வழிபாடுகள் நடைபெற்றன. 50 வருடங்களுக்கு பின்னர் நடந்த இந்த மகாகும்பாபிஷேகத்தில் ஆதீனங்களின் குருமுதல்வர்களும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நேற்று நடந்த மகா கும்பாபிஷேகத்தில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## வடக்கு, தெற்கின் கலாசார மைய அமைப்புகளை சமமாக காப்போம்!

### பிரதமர் ஹரிணி யாழில் உறுதி



யாழ்ப்பாணம், ஏப். 12

வடக்கு, தெற்கின் கலாசாரம் மற்றும் ஆன்மீக மைய அமைப்புகளை சமமாகப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம் - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகத்தில் பங்கேற்றார். இதன்போது கருத்து வெளியிட்டபோதே 11

## நாம் துரோகிகள் அல்லர் காட்டி கொடுக்கவுமில்லை

### இப்படி சொல்பவர் கருணா

மட்டக்களப்பு, ஏப். 12

புலிகள் அமைப்பிலிருந்து அன்று நாம் விலகியமை காட்டிக் கொடுக்கவோ, துரோகம் செய்யவோ அல்ல. மாறாக ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக ரீதியாக போராடவே. கிழக்கு போராளிகள் யாராவது துரோகியாக இராணுவ முகாமில் நின்றதை நிரூபித்தால் அதன் பிறகு இந்த கருத்தை மீளப்பெறுகிறோம் 11



## பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் மீறல்!

### தேர்தல் ஆணைக்குழு தலையீடு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் வந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்ற இரு பிரசார கூட்டங்கள் தேர்தல் வரைமுறைகளை மீறி நடைபெற்றன என்று தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த பிரதமர் ஹரிணி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதில், நீர்வேலி, காரைநகரில் நடைபெற்ற பிரசார கூட்டங்கள் ஆலய வளாகங்களில் நடைபெற்றன. 11

*மாவை கந்தன் ஆலயத்தில்*

## பிரதமரின் வருகையால் பாதுகாப்பு கெடுபிடிகள்!

யாழ்ப்பாணம், ஏப். 12

பிரதமரின் வருகையால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகளால் பக்தர்கள் பலரும் இன்னல்களுக்கு உள்ளாகினர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 50 ஆண்டுகளின் பின்னர் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்த நிலையில், யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ஹரிணி அமரசூரியவும் இதில் 11

## வெருகல் படுகொலைக்கு கருணாவே காரணகர்த்தா

### அரியநேத்திரன் அறிக்கை

மட்டக்களப்பு, ஏப். 12

வெருகல் படுகொலை ஏற்பட பிரதான காரண கர்த்தா கருணாதான் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில், நேற்று (நேற்றுமுன்தினம்) வெருகல் படுகொலையின் 21ஆவது ஆண்டு 11

## புதுவருடத்தின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம்?


கொழும்பு, ஏப். 12

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவையில் தமிழ் - சிங்கள புத்தாண்டின் பின்னர் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கூடுதல் அமைச்சு பொறுப்புகள் புதியவர் களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அமைச்சரவை மாற்றம் 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் நடைபெற்றவேளை...!
(படங்கள் : ஐ.சிவசாந்தன்

# மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் பிரதமர் ஹரிணி நேற்று வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 12

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிலையில், நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் வழிபாடு செய்தார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு ஆலய வளாகத்துக்குள் விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் மற்றும் பிரதமரின் பாதுகாப்பு பிரிவினர் அனைவரும் குவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# சனத் ஜெயசூரியா கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி, ஏப். 12

இலங்கையின் கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைமை பயிற்றுநரான சனத் ஜெயசூரியா கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானத்தை நேற்று பார்வையிட்டார்.

இந்த மைதானத்தை புற்தரை மைதானமாக மாற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் கிரிக்கெட் துறையை வளர்க்கும் நோக்கிலேயே இந்த மைதானத்தை பார்வையிட்டதாகவும் அவர் கூறினார்.

பாடசாலை அதிபர் சவரி பூலோகராஜா, கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினரும் இதன்போது உடனிருந்தனர்.

(ஐ)



# காணிகளை விடுவிக்கக் கோரி முல்லை. அரச அதிபரிடம் மகஜர்

## கேப்பாபிலவு மக்கள் கையளித்தனர்

முல்லைத்தீவு, ஏப். 12

கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி நேற்றைய தினம் கிராம மக்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் நேற்றைய தினம் நேரடியாக மனு ஒன்றை கையளித்தனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மற்றும் உயர் அதிகாரிகளிடமும் கடந்த வருடம் மனுக்களை கையளித்தனர். இதற்கு தீர்வு கிடைக்காத நிலையில், அவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலரை சந்தித்து பேசினர்.

மக்களின் மனுக்கள் தமக்கு கிடைக்கவில்லை என்று கூறியமையை அடுத்தே நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமா மகேஸ்வரனிடம் ஜனாதிபதி செயலகத்தில் கூறப்பட்ட விடயங்களைக்கூறி மக்கள் மீண்டும் மனு ஒன்றை கையளித்தனர்.

மக்களின் மனுவை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைப்பதாகவும் அதற்கான பதில் கடிதங்



களையும் கேப்பாபிலவு மக்களின் பிரதிநிதிகளுக்கு காட்டி அரச அதிபர் விளக்கமளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கேப்பாப்பிலவில் பாடசாலை, ஆரம்ப சுகா தார நிலையம், ஆலயங்கள் , தேவாலயம், பொது நோக்கு மண்டபம் மற்றும் மக்களின் காணிகளில் ஒரு பகுதி 171 ஏக்கர் நிலம் இராணுவத்தின் வசமுள்ளது.

தமது காணியை விடுவிக்குமாறு வலியுறுத்த அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், அவர்களுக்கு இன்றுவரை தீர்வு கிட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.04.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அதிகாரத்தின் ஆட்டம்

டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் அதிரடியாக உலக நாடுகள்மீது விதித்த வரியின் காரணமாக அறிவிக்கப்படாத ஒரு வர்த்தக போர் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சீனாவைத் தவிர, வேறு எந்தவொரு நாடும் பதிலடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் ட்ரம்ப் நிர்வாகத்திடம் மறைமுகமாக சரணடைந்துவிட்டன.

இந்த நிலையிலேயே 90 நாட்களுக்கு வரி விதிப்பை தற்காலிமாக நிறுத்துவதாக ட்ரம்ப் அறிவித்திருக்கிறார். ஆனால், இந்தக் காலத்தில் எந்த நாட்டின்மீது - எவ்வாறான வரிவிதிப்பு மேற்கொள்ளப்படும் என்பது தெரியாத காரணத்தால் பல சிறிய நாடுகளில் பொருளாதாரம் பதற்றத்திலேயே இருக்கிறது. அதில், இலங்கையும் ஒன்று. இது கொரோனா காலம் போன்ற ஒரு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

வரி விதிப்பு பற்றி ட்ரம்ப் கூறியிருக்கும் ஒரு விடயம் அமெரிக்க அதிகாரத்தின் விறைப்பான முகத்தைக் காண்பிக்கிறது. அதாவது, வரி விதிப்புக்கு எதிராக எவரேனும் செயல்பட்டால் அவர்கள்மீது இரு மடங்கு வரி சுமத்தப்படும் - இணக்கமாக சென்றால் வரியை குறைப்பது பற்றி பரிசீலிக்கலாம். இந்த அடிப்படையில் எதிர்த்த ஒரேயொரு நாடான சீனா மீது 145 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

ட்ரம்ப் என்பவர் ஒரு தனிநபரல்லர். அவர் தனது வீட்டுக்குள் மனைவி, பிள்ளைகளுடன் அமர்ந்து மகிழ்வாக உணவருந்திக் கொண்டிருக்கும்போது இவ்வாறான முடிவுகளை அறிவிக்கவில்லை. ட்ரம்ப் என்பவர் அமெரிக்க அதிகாரத்தின் முகம். அமெரிக்க - சீன அதிகாரப் போட்டி உச்சமடைந்து செல்லும் நிலையில் 2027இல் தாய்வானை இராணுவ பலம் கொண்டு சீனா இணைக்க முற்படலாம் என்னும் நிலையில்தான் இவ்வாறான வர்த்தக போர் ஒன்று தொடுக்கப்பட்டுள்ளது. இந்த போர் ஓயப்போவதில்லை. இது இன்னும் பல போர்களுக்கும் வழிவகுக்கலாம்.

உலக அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சக்திகள் பதற்றமடையும் சந்தர்ப்பங்களில் அதிகார சக்திகள் மென்மையான முகத்துடன் தொடர்ந்தும் இருக்க முடியாது. அமெரிக்கா தலைமையிலான உலக செல்வாக்கை முற்றிலும் கேள்விக்கு உள்ளாக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும்போது, நிச்சயம் அமெரிக்காவால் அமைதியாக இருக்க முடியாது. ஒன்றில் வெல்ல வேண்டும் அல்லது தோற்க வேண்டும். ஒருவேளை அமெரிக்கா உலக அதிகார போட்டியில் தோற்கும் நிலைமை ஏற்படுமாக இருந்தால் அது சாதாரணமாக நிகழாது.

அமெரிக்கா என்பது ஓர் அதிகார மையம். உலக வரலாற்றில் பல அதிகார மையங்களை தோற்கடித்துத்தான் இந்த இடத்தை அமெரிக்கா அடைந்தது. இந்த நிலையில் அமெரிக்காவை உலக அரங்கில் விழுத்தாமல் இன்னொரு சக்தி தலைதூக்க முடியாது. இதுதான் இந்த உலக அதிகார ஆட்டத்தின் விதி. இந்த விதிக்குக் கட்டுப்பட வேண்டியதுதான் ஏனைய நாடுகளின் நிலைமை. இதில் சுயாதீனம் என்று ஒன்றில்லை. அமெரிக்கா தேவையென்றால் அமெரிக்காவுடன் ஒத்துப்போங்கள் - இல்லையேல், அதன் விளைவுகளை எதிர்கொள்ளுங்கள்.

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை; வடமராட்சி கிழக்கில் 6 பேர் கைது!

வடமராட்சி, ஏப். 12

வடமராட்சி கிழக்கின் கட்டைக்காடு, சுண்டிக்குளம் கடற்பகுதிகளில் ஒளி பாய்ச்சி மீன்பிடித்த 6 பேர் 5 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை வரை மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வெற்றிலைக்கேணி கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த ரோந்து நடவடிக்கையில் காங்கேசன்துறையில் இருந்து அதிவிரைவு டோரா படகும் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைதான 6 பேரும் படகுகளும் சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

தையிட்டி போராட்டம்:

## வாக்குமூலம் அளிக்குமாறு ஒருவருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஏப். 12

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பெண் ஒருவரை வாக்குமூலம் அளிக்குமாறு பொலிஸார் கட்டளை கடிதம் அனுப்பியுள்ளனர்.

தையிட்டி விகாரைக்கு எதிராக நடத்தப்படும் தொடர் போராட்டத்தில் பங்கேற்று வரும் ராஜினி என்பவருக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரை பலாலி பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து வாக்குமூலம் அளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## சொற்பொழிவும் குருபூசையும்

யாழ்ப்பாணம், ஏப். 12

சைவ வாழ்வியலில் 'திருவிளையாடல் புராணம்' பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக மாக சிவநெறிப்பிரகாசர் கதிர் காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சமய பெரியாரின் குருபூசையும் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாதம் ஆரம்பமாகும் சிறப்பு சொற்பொழிவும் குரு பூசையும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 4 மணிக்கு 2026 சித்திரை மாதம் வரை நடைபெறும்.

இந்தவகையில் இதன் ஆரம்ப நிகழ்வு அராலி கிழக்கு மலை யாளங்காடு ஐயனார் கோவிலி லும் அடுத்த வாரம், தெல்லிப்பழை மாவைகலட்டி நாகதம்பிரான் தேவஸ்தானத்திலும் மூன்றாவது வாரம் சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலயத்திலும் நான்காவது வாரம் நாவற்குழி தெற்கு பெரும்படை அம்மன் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன. (ஐ)

## கழிவுகளுக்கு வைத்த தீயில் பல தென்னங்கன்றுகள் நாசம்!

தீயை அணைக்காத பருத்தித்துறை நகர சபை



வடமராட்சி, ஏப். 12

பருத்தித்துறை நகர சபையினர் கொட்டிய கழிவுகளுக்கு நேற்றைய தினம் தீ வைக்கப்பட்டதில் பல நூறு தென்னங்கன்றுகள், வடலிகள் என்பன எரிந்து நாசமாகின. எனினும், இந்தத் தீயைக் கட்டுப்படுத்த நகர சபையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இதேநேரம், இந்தத் தீயால் பருத்தித்துறை - மருதங்கேணி வீதி வழியாக மக்கள் செல்ல முடியாதளவு புகை மூட்டம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபை குடத்தனை பகுதியில் இடம் ஒன்றை தெரிவு செய்து கழிவுகளை கொட்டியது. அந்த இடத்தில் கழிவுகளை கொட்டுவதற்கு விவசாய அமைப்புகள் பெரும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதையடுத்து, கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்பட்டது. எனினும், முன்னர் கொட்டிய கழிவுகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படவில்லை.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் அந்தக் கழிவுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து பரவிய தீ அப்பகுதியில் நின்ற பல நூறு தென்னங்கன்றுகள், வடலிகளை எரித்து நாசமாக்கியது என்று கூறப்படுகிறது. (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 12 சனிக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 29
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பவுர்ணமி




**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**இடபம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கடகம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். நெருக்கடி கள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தொழிலில் லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை

## விளையாட்டுத்துறை அமைச்சர்

வவுனியா, ஏப். 12

வவுனியா, ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்தி சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்குக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் தேவைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். இந்த விஜயத்தில் அமைச்சருடன் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன்னி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஓமந்தையில் அமைந்துள்ளது.

அங்கு பல தேவைகள் காணப்படுகின்றன. பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்கள், அதற்கான உபகரணங்கள் என பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை எதிர் வரும் காலங்களில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாணத்தில் உள்ளக விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் மெய்வல்லுனர் பயிற்சிகள் என்பவற்றை எதிர்காலத்தில் வழங்கக் கூடியதாக இருக்கும். இந்தப் பிரதேசத்தில் நீச்சல் பயிற்சிகளும் வழஙகப்படுகின்றன.

விளையாட்டுத் துறையை வவுனியா மாவட்டத்தில் சிறப்பாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இளைஞர்களிடையே காணப்படுகின்ற தீய பழக்கவழக்கங்கள், மது பாவனை, தொலைபேசி பாவனை, போதைப் பொருள் பாவனை என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டு துறை அவசியம். அந்த வகையில் இந்த விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(அ)

# இனவாதத்தைக் கொண்டு இனியும் நாட்டில் அரசியல் செய்ய முடியாது!

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

மன்னார், ஏப். 12

இனவாதத்தைக் கொண்டு இனியும் இந்த நாட்டில் அரசியல் செய்ய முடியாது. ஏனெனில் இந்நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை கொண்டு மிகப் பெரிய ஆளணியாகத் திரண்டிருக்கிறார்கள் என பெருந்தோட்ட, மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதியமைச்சர் நேற்று மாலை மன்னார் - எழுத்தூர் பகுதியில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் மன்னார் நகர சபை வேட்பாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# வவுனியா பொலிஸாரிடம் சிக்கிய இராணுவ சிப்பாய்!

வவுனியா, ஏப். 12

வவுனியாவின் பல பகுதிகளிலும், வீதியில் செல்லும் பெண்களை பின் தொடர்ந்து சென்று சங்கிலி அறுத்து வந்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம்பெற்ற சங்கிலி அறுப்பு சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மோட்டர் சைக்கிளுடன் ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் பணியாற்றும் மிகிந்தலையைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இராணுவச் சிப்பாயால் அறுக்கப்பட்ட சங்கிலிகள் அடைவு வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், சங்கிலி அறுப்பு சம்பவங்களுக்கு பயன்படுத்திய அவரது சொந்த மோட்டர் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பூநகரி பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப். 12

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிளிநொச்சி - பூநகரி பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், வேட்பாளர்கள் பின்பற்றவேண்டிய சட்டங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

கலந்துரையாடலில் பூநகரி பிரதேச சபையில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளரால் தேர்தல் பிரச்சாரத்தின் போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் மற்றும் வேட்பாளர் ஒருவர் பிரசாரத்தின் போது செலவு செய்யும் செலவீனங்கள் மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

(அ)

# போதை மாத்திரைகளுடன் இளைஞர் யாழில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை நேற்று முன் தினம் இரவு முன்னெடுக்கப்பட்டது.

19 வயதான குறித்த சந்தேக நபரிடம் இருந்து 94 போதை மாத்திரைகளும் 465 கிராம் கஞ்சா கலந்த மாவாவும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழிகள் தோண்டுவதற்கு இதுவரை எந்த அரசும் 100 வீத ஆதரவை வழங்கவில்லை!

## சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல்

கொழும்பு, ஏப். 12

**மனிதப்புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளுக்கு இலங்கையில் எந்த அரசாங்கமும் இதுவரை நூறு வீத ஆதரவை வழங்கவில்லை என தெரிவித்துள்ள சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், அரசாங்கங்களிடம் இது தொடர்பாக அரசியல் உறுதிப்பாடு இல்லை என தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் காணாமல்போனோரை தேடியறியும் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதை தேசிய மக்கள் சக்தி கைவிடவேண்டும்.

பலாலி வீதியை கடுமையான கட்டுப்பாடுகளுடன் அரசாங்கம் திறக்கத் தீர்மானித்துள்ளமை உண்மையாகவே கரிசனை அளிக்கிறது.

அந்த வீதி பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்ட போதிலும் அரசாங்கம் பாதுகாப்பு சரி பார்ப்பில் ஈடுபடாமல் இந்த வீதியை திறந்துள்ளது. இதன் காரணமாகவே கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் புறக்கணித்து தேர்தலில் வாக்குகளை பெறுவதற்கான முயற்சி போல தோன்றுகிறது. இவ்வாறான விடயங்களை செய்யவேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்தும் நான் தேர்தல்களை விட தேசத்தின் பாதுகாப்புக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

வீதியை திறக்கவேண்டும் என்றால் முழுமையான பாதுகாப்பு சரி பார்ப்புக்குப் பின்னரே அதனை திறக்கவேண்டும்.

மேலும், பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு எந்தவித தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத வகையில் அதனை திறக்கவேண்டும்.

பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் என்பது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் மிகவும் பாரதூரமானது.

பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட வர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் பெரும் துயரத்தை அனுபவிக்கின்றனர், நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இறுதி முடிவொன்று இல்லாததால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த துயரத்தை அனுபவிக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தங்கள் இறுதிநாட்கள் வரை பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட வர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் துயரத்தை அனுபவிக்கின்றனர்.

செம்மணி , வந்தாறுமூலை மன்னார் சதொச கொக்குத்தொடுவாய் என பல இடங்களில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணியில் மீண்டும் சமீபத்தில் மாநகரசபையினர் கட்டுமானப்பணியில் ஈடுபட்டிருந்த வேளை அதற்காக தோன்றிய வேளை பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

செம்மணியில் புதிதாக மீட்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து புதிய விசாரணைகள் இடம்பெற உள்ளன.

எனினும் இதற்கான நிதி இன்னமும் ஒதுக்கப்படவில்லை.

மனித புதைகுழிகளை அரசாங்கம் உரிய முறையில் கையாளவில்லை. இந்த விடயத்தில் முற்றிலும் அரசியல்உறுதிப்பாடு அற்ற நிலையே நிலவுகின்றது. பொலிஸாரும் உரிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

அரசாங்கம் மனித புதைகுழிகளை தோண்டுவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது அதற்கான ஆட்களை ஒதுக்கீடு செய்வது போன்றவற்றில் பிரச்சினைகள் உள்ளன.

மனித புதைகுழி அகழப்படும் விடயத்திற்கு பல நிபுணர்கள் தேவை- ஒருங்கிணைத்து செயற்படவேண்டும் ,எங்கள் நாட்டை பொறுத்தவரை இது புதிய விடயம்.

மன்னார் சதொச மனித புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகள் சட்டமா அதிபரின் தலையீட்டால் முடங்கின.இது அவருக்கு தொடர்பில்லாத விடயம்.அங்கு அகழ்வுதான் இடம்பெற்றதே தவிர குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறவில்லை. ஆகவே அது அவருக்கு தொடர்பில்லாத விடயம். அவரின் தலையீட்டால் எதிர்மறையான பாதிப்பு ஏற்பட்டது.

சதொச மனித புதைகுழி அகழ்வின் போது சம்மந்தப்பட்ட தரப்புகள் சட்டமா அதிபரை உள்ளே கொண்டுவந்தன.

அரசாங்கம் மனிதபுதைகுழிகள் தோண்டப்படுவதை குழப்புவதற்கு பல வழிமுறைகளை கையாளும்,நிதியை விலக்கிக் கொள்வதன் மூலம் அகழ்வை குழப்பும்.அகழ்வு நடைபெற்றுக்கொண்டி ருக்கும்போது நிதி இல்லை என தெரிவிப்பார்கள்.

ருவாண்டா, சிலி போன்ற நாடுகளில் மனித புதைகுழிகளை தோண்டுவதற்கு அரசாங்கங்கள் நிதியை வழங்கின.

ஆனால் இங்கு அரசாங்கங்கள் வெளிநாடு நிதியை கூட தடுக்கின்றன, இதுதான் எங்களின் அனுபவம்-என்றார். (அ)

# மகாவலி ஆற்றில் விழுந்த பெண்ணை காப்பாற்றினார் பொலிஸ் கான்ஸ்டபிள்

கொழும்பு, ஏப். 12

கட்டுகஸ்தோட்டை பாலத்திலிருந்து இளம் பெண் ஒருவர் மகாவலி ஆற்றில் விழுந்த நிலையில், சம்பவ இடத்திற்கு அருகில் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேரத் பாலத்திலிருந்து மகாவலி ஆற்றில் குதித்து அந்த பெண்ணைக் காப்பாற்றியுள்ளார்.

இளம் பெண் ஒருவர் மகாவலி ஆற்றில் விழுந்துள்ளதாக பிரதேசவாசிகள் குறித்த அதிகாரிக்கு தெரிவித்ததை அடுத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் உயிர் பிழைத்த இளம் பெண் கட்டுகஸ்தோட்டை பகுதியைச் சேர்ந்த 21 வயதானவர் என தெரியவந்துள்ளது.

அந்த இளம் பெண் தற்போது மேலதிக சிகிச்சைக்காக கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, ஏப். 12

சஹஸ்தனவி முனையத்திற்காக 350 மெகாவோட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையில் இலங்கை மின்சார சபை கைச்சாத்திட்டுள்ளது.

நாட்டில் உள்ள வீட்டு மற்றும் வர்த்தகப் பாவனைகளுக்குக் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும் என இலங்கை மின்சார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மின் முனையத்தின் நிர்மாணிப்பு, உரிமை மற்றும் முன்கொண்டு செல்லுதல் உள்ளிட்ட செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட சஹஸ்தனவி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

25 ஆண்டுகளின் பின்னர் இதன் உரிமம் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, ஏப்.12

அநுராதபுரம் - கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹல்மில்லவெடிய பகுதியில் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமிக்கப்பட்ட நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹல்மில்லவெவ பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

இவர் புல்வெட்டும் இயந்திரத்தைப் பராமரித்துக் கொண்டிருக்கும்போது மின்சாரம் தாக்கி காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# காயங்களுடன் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 12

நுங்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாதென்ன பகுதியில் உள்ள வீடொன்றின் அறையிலிருந்து காயங்களுடன் உயிரிழந்த நிலையில் நபரொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மாளிகாதென்ன, வெயங்கொடை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளில் நுங்கமுவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# போதைப்பொருட்களுடன் தம்பதி கைது!

கொழும்பு, ஏப்.12

மாத்தறை - திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிஹந்தெனியவத்த பகுதியில் உள்ள வீடொன்றில் தோட்டாக்கள் மற்றும் போதைப்பொருட்களுடன் தம்பதியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திக்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கணவனிடமிருந்து தோட்டாக்கள், 01 மகசின் மற்றும் 02 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மனைவியிடமிருந்து 01 கிராம் ஹேஷ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கத்தை இலங்கையில் மதிப்பிடக் காலம் தேவை!

## நாணய நிதியம் கூறுகிறது

கொழும்பு, ஏப். 12

உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கத்தை இலங்கையில் மதிப்பிடுவதற்கு மேலும் காலம் தேவை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை முடித்த பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் இவான் பபாஜியோர்ஜியோ தலைமையிலான குழு இந்தக் கருத்தை வெளியிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளை செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் மற்றும் சமீபத்திய பேரண்ட பொருளாதார போக்குகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு கடந்த 3 ஆம் திகதி நாட்டுக்கு விஜயம் செய்தது.

அதன்படி, தமது தூதுக்குழு பணியை முடித்துக்கொண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்த குழு, சமீபத்திய வெளிப்புற அதிர்ச்சிகளும் நாளாந்தம் வளர்ந்து வரும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளும், தொடர்ந்து வழமைக்கு திரும்பி வரும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உலகளாவிய அதிர்ச்சியின் தாக்கத்தையும், இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் மதிப்பிடுவதற்கு மேலதிக காலம் தேவை என்றும் அந்த தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# கோர விபத்தில் சிறுவன் பலி!

கொழும்பு, ஏப். 12

மினுவாங்கொடை- குருணாகல பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்தில் சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவங்கொடை, வெதமுல்ல பகுதியைச் சேர்ந்த ரஷான் நிம்ஹாஸ் என்ற பாலர் பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்கந்த சந்தி பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் லொறி ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற சிறுவன் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பெண், அவரது மற்றுமொரு குழந்தை மற்றும் அவரது தாயார் ஆகியோர் அடங்கு வர்.

காயமடைந்தவர்கள் மினுவாங்கொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்புக!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

**புதிய வரிவிதிப்பு தொடர்பாக ஆராய் பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஜனாதிபதியுடனான சர்வ கட்சி மாநாட்டைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பில், அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர வரி தொடர்பாக கலந்துரையாடி உரிய திட்டங்களை முன்வைப்பதற்காக பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்குமாறும் ஜனாதிபதியிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.


அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு தீர்மானத்தை ஒத்திவைத்திருந்தாலும் இலங்கை எதிர்கொள்ளும் அபாயம் குறித்து ஜனாதிபதிக்கு தான் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் சஜித் கூறியுள்ளார்.

குறிப்பாக ஆடை துறையில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பணியாற்றுகின்றனர் எனவும், இதனூடாக சுமார் ஒரு மில்லியன் பேர் பயனடைகின்றனர் எனவும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் ஆடை ஏற்றுமதி 38 வீதமாகும் எனவும், அதில் 28 வீதம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது எனவும், 13 வீதம் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஆகவே புதிய வரிவிதிப்பு தொடர்பாக ஆராயப் பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதேபோல் சர்வதே நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு தாம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், 2033 முதல் மீண்டும் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்பதையும் தான் முன்மொழிந்துள்ளதாகவும் சஜித் தெரிவித்தார்.

அத்துடன் எமது நாட்டின் ஏற்றுமதி ஒரு சில இடங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது எனவும், ஜீ.எஸ்.பி வரிச் சலுகை எமது நாட்டுக்கு முக்கியத்துவமானது எனவும் தான் தெரிவித்துள்ளதாக சஜித் குறிப்பிட்டுள்ளார். (அ)



# இலங்கையில் முதல்முறையாக ஆழ்கடலில் புத்தாண்டு நிகழ்வு

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் முதல் முறையாக திருகோணமலைக்கு கடற்படை தளத்தில் ஆழ்கடலில் சிங்கள - தமிழ் புத்தாண்டு கொண்டாடப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் சுழியோடி பிரிவினரின் ஒத்துழைப்புடன் கடற்படையின் மலிமா ஹொஸ்பிடாலிட்டி சர்வீசஸ் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது.

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும் இலங்கையின் அழகிய நீரின் ஆற்றலை எடுத்துக்காட்டும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் சுழியோடும் வீரர்கள் பாரம்பரிய கலாசார நிகழ்வுகளை நடத்தி, விளையாட்டுக்களில் ஈடுபட்டதாக இலங்கை கடற்படை அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (அ)

# ரணிலையும் அழைத்துள்ளது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு!

கொழும்பு, ஏப். 12

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பல விடயங்களை அறிந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வியாழக்கிழமை சாமர சம்பத் தசநாயக்க தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார்.

எனவே, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்படவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

"பட்டலந்த வதை முகாமில் பயிற்சி பெற்றவர்கள், மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் ஒரே இரவில் 186 பேரை கொலை செய்தனர். இப்படி வடக்கு, கிழக்கில் பல வதைகளும், கொலைகளும் இடம்பெற்றுள்ளன. எனவே, வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும்."

-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர், பட்டலந்த வதை முகாமில் சித்திரவதை தொடர்பில் பயிற்சி பெற்றவர்கள், 1988, 89 களில் ஜே.வி.பி. இளைஞர்களை சித்திரவதை செய்தவர்கள், பின்னர் அப்படியே 90 காலப்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்து சித்திரவதைகளை செய்தனர்.

குறிப்பாக சத்துருக்கொண்டானின் 90 ஆம் ஆண்டில் சுற்றிவளைப்பு செய்யப்பட்டு 186 பேர் முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர். இதில் 42 பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களில் ஐவர் விசேட தேவை உடையவர்கள். இந்த 186 பேரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் விசாரணை நடைபெற்றது. 35 ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் நீதி பரிகாரம் கிடைக்கவில்லை. நீதி கதவை தற்போது திறந்துள்ளீர்கள். வடக்கு, கிழக்கில் இப்படி பல கொலை இடம்பெற்றுள்ளன.

சகலருக்கும் நீதி என்ற அடிப்படையில் உங்களால் வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். அநீதியாயம், அராஜயகம் செய்த கொடியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்- என்றார். (அ)

# மனைவி, மகளை மண்வெட்டியால் தாக்கி காயப்படுத்திய தந்தை உயிரை மாய்த்தார்!

கொழும்பு, ஏப். 12

கேகாலை, தெதிகம, மெனிக்கடவர பிரதேசத்தில் தந்தை ஒருவர் தனது மனைவி மற்றும் மகளை மண்வெட்டியால் தாக்கி காயப்படுத்திவிட்டு தனது உயிரை மாய்த்துக்கொண்டதாக தெதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தெதிகம, மெனிக்கடவர பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார்.

உயிரிழந்த தந்தை நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலை 01.30 மணியளவில் வீட்டில் உள்ள அறை ஒன்றில் உறங்கிக்கொண்டிருந்த மனைவி மற்றும் மகளை மண்வெட்டியால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இரண்டாவது அறையில் உறங்கிக்கொண்டிருந்த மற்றுமொரு மகள் சத்தத்தைக் கேட்டு உடனடியாக தனது குழந்தையுடன் அயல் வீட்டுக்குள் ஓடிச் சென்று அங்கிருந்தவர்களிடம் உதவி கோரியுள்ளனர்.

இதனையடுத்து அயல் வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் இணைந்து காயமடைந்த மனைவி மற்றும் மகளை பலேகம வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் காயமடைந்த மனைவி மற்றும் மகள் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

72 வயதுடைய மனைவியும் 51 வயதுடைய மகளுமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தையடுத்து தந்தை தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஏப்ரல் மாதத்துக்கான அஸ்வெசும வைப்பில்!

கொழும்பு, ஏப். 12

'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் ஏப்ரல் மாதத்திற்கான நலத்திட்ட உதவித் தொகை நேற்று முதல் பயனாளிகளுக்குக் கிடைக்கும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

தகுதியுள்ள பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் அந்தந்தத் தொகைகள் ஏற்கனவே வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பட்ஜட்டின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட, முதியோர் உதவித் தொகை உட்பட அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் விநியோகமும் இந்த மாதம் முதல் வழங்கப்படுவதாகவும் நலன்புரி நன்மைகள் சபை கூறியுள்ளது.

'அஸ்வெசும' நலத்திட்டத்துக்கு தகுதியுள்ள 1,737,141 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 12.63 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, அந்தக் குடும்பங்களில் உள்ள 70 வயதுக்கு மேற்பட்ட 580,944 நபர்களின் கணக்குகளில் ரூ. 2.9 பில்லியன் வைப்பிடப்பட்டுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் இலங்கை விஜயத்தையடுத்து இரு நாடுகளினதும் உறவு மீண்டும் உறுதி

## இந்திய ஊடகம் தகவல்

புதுடில்லி, ஏப். 12

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை அடுத்து, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மீண்டும் உறுதியாகி இருப்பதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய நம்பிக்கை, உடன்பாடுகள் மற்றும் தீர்க்கப்படாதுள்ள பல விடயங்களுக்கான தீர்வுகளைக் காணுதல் போன்ற விடயங்கள், புதிதாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதை அடுத்து, கடந்த காலங்களில் ஜே.வி.பி கடைப்பிடித்து வந்த இந்தியாவுக்கு முரணான கொள்கை தொடர்பில் சந்தேகங்கள் வெளியிடப்பட்டு வந்தன.

இந்நிலையில் இலங்கையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுத் தலைவர் என, மோடியின் விஜயம் அமைந்திருந்தது.

இதன் ஊடாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் பிள்ளையானுக்குத் தொடர்பு!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 12

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பல விடயங்கள் தெரிய வந்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று முன் தினம் சபையில் தெரிவித்தார்.

படலந்த வதைமுகாம் தொடர்பான விசாரணை அறிக்கை மீதான விவாதத்தின்போதே அவர் இத் தகவல்களை வழங்கினார்.

இதன்போது குறித்த தாக்குதலுக்கும் பிள்ளையானுக்கும் தொடர்பு உள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்தார்.

அத்துடன் குறித்த விசாரணையை தாம் ஒருபோதும் மூடி மறைக்கப் போவதில்லை எனவும், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேயபால மேலும் கூறினார். (அ)

# நேற்று முதல் விசேட ரயில் சேவை!

கொழும்பு, ஏப். 12

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவைகளை நேற்று முதல் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இது குறித்து தெளிவுபடுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சித்திரைப் புத்தாண்டில் கொழும்பிலிருந்து சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்களின் நலன் கருதி விசேட ரயில் சேவைகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் 10 ரயில்கள் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆறு ரயில்கள் நேற்று பல்வேறு இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதே போல அனைத்து ரயில்களும் எதிர்வரும் 18,19,20 ஆகிய திகதிகளிலும் இயக்கப்படும்.

இதன் மூலம் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான பயணிகள் ரயில் சேவையை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பண்டிகை காலத்தில் ரயில்களில் சன நெரிசல் காணப்படுவதால் பயணிகள் தங்களது பொருட்கள் மீது கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் -என்றார். (அ)

# தேசபந்துவின் பிணைக்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்ய முடிவு

## பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்

கொழும்பு, ஏப். 12

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு எதிராக, மேல் நீதிமன்றில் சீராய்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மாத்தறை நீதவான் நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளார்.

மாத்தறை நீதவான் அனுர இந்திரஜித் புத்ததாஸவினால் நேற்று முன்தினம் தேசபந்து தென்னக்கோன் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

சாட்சியங்களுக்கு எதிராக செயற்படுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் அவ்வாறான குற்றங்கள் பதிவானால் பிணை இரத்துச் செய்யப்படும் என்றும் பிரதிவாதிக்கு நீதவான் எச்சரித்தார்.

அத்துடன் பிரதிவாதிக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டதுடன், அவரது கடவுச் சீட்டை நீதிமன்றிடம் கையளிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

எவ்வாறாயினும், பிரதிவாதிக்கு எதிரான விசாரணைகள் முக்கிய கட்டத்தை அடைந்துள்ள நிலையில், அவருக்குப் பிணை வழங்கப்படுவதற்குப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கடும் எதிர்ப்பை தெரிவித்தார்.

இந்நிலையில் தேசபந்து தென்னக்கோனின் பிணைக்கு எதிரான சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டி இருப்பதாகவும் பிரதி சொலிசிட்டர் மன்றுரைத்தார். (அ)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 22 இந்தியப் பிரஜைகள் கைது!

கொழும்பு, ஏப். 12

காலாவதியான விஸாக்களின் கீழ் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 22 இந்திய பிரஜைகள் நேற்றுப் பிற்பகல் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.



இராஜகிரிய பகுதியில் உள்ள ஒரு அலுவலக வளாகத்தில் இருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த இந்தியர்கள் சுமார் 3 மாதங்களுக்கு முன்பு இந்த நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதுடன், அவர்களில் 17 பேர் சுற்றுலா விஸாக்களில் வந்துள்ளனர்.

ஏனையவர்களில், 4 பேர் குடியிருப்பு விஸாக்களின் கீழும், ஒருவர் வணிக விஸாக்களின் கீழும் நாட்டுக்கு வந்துள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் சந்தேகத்திற்கிடமான இரண்டு இந்திய பிரஜைகளிடம் நடத்தப்பட்ட திடீர் விசாரணையின்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 25 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் தற்போது வெலிசறையில் உள்ள தற்காலிக தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் நாடு கடத்தப்படவுள்ளனர். (அ)

# கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 34 புதிய திட்டங்கள்

கொழும்பு, ஏப். 12

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் மூலம் புதிதாக 34 வேலைத்திட்டங்கள் இந்த ஆண்டு அமுலாக்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் பெரும்பாலும் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது குறித்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

சமூக, சுற்றாடல் மற்றும் இன ரீதியான மாறுதல்களை இலக்காகக் கொண்டு கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# இதுவரை 1121 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 12

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ) 1,121 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 06 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 1,062 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# பாடசாலைகளுக்கு நேற்றுடன் விடுமுறை

கொழும்பு, ஏப். 12

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளினது 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமான நிலையில் நேற்று முதல் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கை எதிர் வரும் மே மாதம் 9 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

# இஸ்ரேல் விவசாயத் தொழிலுக்கு இலங்கையரை உள்வாங்கும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, ஏப் .12

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட இஸ்ரேலின் விவசாயத் தொழில்துறைக்கு இலங்கையர்களை உள்வாங்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேலில் விவசாயத் தொழிற்துறையில் பணியாற்றக் கூடிய 95 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தொழிலுக்காக இஸ்ரேலுக்குச் செல்லும் 12 பேருக்கு நேற்று முன்தினம் விமான பயணச் சீட்டுகள் வழங்கி வைக்கப்பட்டது.


அவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி இஸ்ரேலுக்குச் செல்லவுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கல்முனையில் போக்குவரத்தை இலகுவாக்க மெரின் டிரைவ் கடலோரப் பாதை மக்களிடம்!



கல்முனை, ஏப். 12

**சனநெரிசல் கூடிய கல்முனை மாநகரத்தின் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், கல்முனை மாநகரத்திற்கு வர்த்தக நோக்கத்திற்காக வரும் வெளியூர் வர்த்தகர்கள், பயணிகளின் அசௌகரியத்தை குறைக்கவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸின் முயற்சியின் பயனாக கார்பட் வீதியாக புனரமைக்கப்பட்ட நிந்தவூர் - பெரியநீலாவணையை இணைக்கும் மெரின் டிரைவ் கடலோரப் பாதை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.**

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸின் டி-100 திட்டத்தின் கீழ் சுமார் 65 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை மாநகர பிரதேசத்தை குறிப்பாக சாய்ந்தமருது, கல்முனை மற்றும் மருதமுனையை ஊடறுக்கும் இந்த மெரின் டிரைவ் திட்டத்தின் முதலாம் கட்டம் நிறைவடைந்துள்ளது.

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய மீன் சந்தை உட்பட கடல்சார் வியாபார நிலையங்களை நிறையவே கொண்டுள்ள இப்பிராந்திய வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மை கருதி செய்யப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டமானது பிராந்திய பொருளாதார வளர்சிக்கும், மக்களின் இலகுவான போக்குவரத்துக்கும் உதவியாக அமைந்துள்ளது. இப்பாதையில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்து மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# புதிய மாணவர்கள் உள்வாங்கும் நிகழ்வு



திருமலை, ஏப். 12

மூதூர் நெய்தல் நகர் சமூக அபிவிருத்தி நிலையமான அந்-நுஸ்ரா தலைமையின் கீழ் இயங்கிவரும் அந் நுஸ்ரா பாலர் பாடசாலையின் இவ் வருடத்திற்கான புதிய மாணவர்கள் உள்வாங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி அளவில் அந் நுஸ்ரா பாலர் பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வானது தலைவர் என்.எம் முஸாஹிர் செயலாளர் எஸ்.எம். ஸஹ்தி பொருளாளர் எம்.எஸ்.எம்.இர்பான் மற்றும் உறுப்பினர் என்.எம். முபரிஸ் மற்றும் எஸ்.எம்.சர்மின் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மூதூர் பிரதேச சபை செயலாளர் ஜெம்சித் மற்றும் மூதூர் சுகாதார பணிமனை அதிகாரி டாக்டர் ஹில்மி, நெய்தல் நகர் கிராம உத்தியோகத்தர் மதீன், நெய்தல் நகர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சப்னா ஆகியோர் கலந்து சிறப்பித்து இருந்தனர்.

(அ)



# கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் கல்முனை கல்வி வலயத்தில் ஆராய்வு

கல்முனை, ஏப். 11

கல்முனை கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நேற்று முன் தினம் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுறுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 2025 ஆம் கல்வியாண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், கல்விசார் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மேலும் 2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அடைவு மட்டத்தில் அதிகரிப்பினைக் காட்டிய பாடசாலையின் அதிபர்களுக்கு நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்முனை கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர். குறித்த கல்முனை கல்வி வலயம் கடந்தாண்டு வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# திருகோணமலையில் மாற்றுத்திறனாளிகளில் தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டம்

திருமலை, ஏப். 11

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்கின்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சி திட்டம் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது

இந்நிகழ்விற்கு மூதூர், கிண்ணியா கோமரன்கடவெல, குச்சவெளி, தம்பலகாமம், பட்டினமும் சூழலும், வெருகல் ஆகிய பிரதேச செயலக பிரிவிலிருந்து பல்வேறுபட்ட உற்பத்தி பொருட்களுடன் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை தனித்தனியாக பார்வையிட்டதுடன், எவ்வாறு இப்பொருட்களுக்கு பெறுமதியினை அதிகரிக்கலாம் என்றும், பெறுமதியினை அதிகரிப்பதற்கு எவ்வாறான உதவிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கலாம் என்பது தொடர்பாகவும் விரிவாக ஆலோசனை வழங்கப்பட் டது.



வளவளராக கலந்து கொண்ட விதாதா மற்றும் சிறு கைத்தொழில் உத்தியோகத்தர்கள் பொருட்களின் பெறுமதியிடல், பொருட்களுக்கான வியாபார குறியீட்டினை எவ்வாறு தெரிவு செய்வது, விலையிடல் போன்ற தலைப்புகளில் ஒவ்வொரு பொருட்களுக்கும் தனித்தனியான விளக்கங்களை வழங்கினர்.

மேலும் பொருட்களினை சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் விளக்கம் வழங்கப்பட்டது. அதாவது பொருட்களுடைய சந்தைப்படுத்தல் தொடர்பாக எவ்வாறு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி இலகுவான முறையில் பொருட்களை சந்தைப்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் வளவாளர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், மற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட சோதனைகள்!

மட்டக்களப்பு, ஏப். 12

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளிதரன் பணிப்பின் பேரில் மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள், அங்காடி வியாபாரிகள் என நூற்றுக்கும் அதிகமான வர்த்தக நிலையங்களில் திடீர்ச் சோதனைகளையும் இபரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

சுற்றுவளைப்பின்போது பாவனைக்கு தகாத தராசுகள் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளத்தல் கருவிகள் போன்றவற்றை வைத்து வியாபாரம் செய்தமைஇ நிறை குறைவாக விற்பனை செய்தமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் நான்கு வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களில் இருந்து நிறுத்தல், அளத்தல் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டதோடு அவர்கள் மீது வழக்கு செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

(அ)

# சாரணர் பயிற்சி பாசறை

கல்முனை, ஏப். 12

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் வருடாந்த சாரணர் ஒன்று கூடலும், பயிற்சிப் பாசறையும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெப்பை தலைமையில் எதிர்வரும் 18, 19, 20 ஆம் திகதிளில் நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறைக்கு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறையில் தமிழ், முஸ்லிம், சிங்கள சாரணர்கள் ஒன்றாக தங்கியிருந்து இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பரஸ்பரம், ஒற்றுமை, சகோதரத்துவம் ஏற்படுவதற்கு இப்பயிற்சி பாசறை வழிவகுக்குமென ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் எம்.எப். றிபாஸ் தெரிவித்தார்.

(எ-11)

# மட்டக்களப்பில் மான் இறைச்சியை கடத்திய 2 பேர் பொலிஸாரால் கைது!

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு - கரடியனாறு பிரதேத்தில் இருந்து செங்கலடி பிரதேசத்துக்கு பட்டா ரக வாகனத்தில் 20 கிலோ மான் இறைச்சியை கடத்தி சென்ற இருவரை செங்கலடி கறுத்த பாலத்தில் வைத்து கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த பாலத்தில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

இதன்போது கரடியனாறு பிரதேசத்தில் இருந்து செங்கலடி பிரதேசத்தை நோக்கிப் பயணித்த சிறியரக வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டபோது, அதில் மறைத்து கடத்தி கொண்டு செல்லப்பட்ட 20 கிலோ மான் இறைச்சியை மீட்டதுடன் இருவரை கைது செய்தனர். கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றினர்.

இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் வர்த்தக போர்: சீனாவுக்கான வரி 145 சதவீதம்

வாஷிங்டன், ஏப். 12

**சீன பொருட்களுக்கான வரிகளை 145 சதவீதமாக கடுமையாக உயர்த்துவதன் மூலம் சீனாவுடனான தற்போதைய வர்த்தக போரை ட்ரம்ப் தீவிரப்படுத்தியுள்ளார் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.**

அமெரிக்க பொருட்கள் மீது வரி விதித்து வரும் நாடுகளுக்கு பதிலடியாக, அதே அளவுக்கு பதிலுக்கு பதில் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்தார். கடந்த 2ஆம் திகதி இலங்கை உட்பட பல நாடுகளுக்கு புதிய வரிகளை விதித்தார்.

எனினும், பல நாடுகளின் கோரிக்கையை அடுத்து வரிகளை நடைமுறைப்படுத்துவதை 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். ஆனால், சீனாவுக்கு மட்டும் விதிவிலக்கு இல்லை என்று அந்த அறிவிப்பில் தெரிவித்தார்.

சீன பொருட்கள்மீது ஏற்கனவே 54 சதவீத வரியை விதித்திருந்த ட்ரம்ப், மேலும் 50 சதவீத வரி விதித்தார். இதற்கு பதிலடியாக அமெரிக்க பொருட்கள்மீது சீனா 84 சதவீத வரி விதித்தது. சீனாவின் பதிலடியால் கடும் கோபமடைந்த ட்ரம்ப் சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை 125 சதவீதமாக உயர்த்தினார். இந்நிலையில், மேலும் 20சதவீதமாக வரியை உயர்த்தியுள்ளார். இதனால், சீனப் பொருட்கள் மீதான வரி 145 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையிலேயே, சீன பொருட்களுக்கான வரிகளை 145 சதவீதமாக கடுமையாக உயர்த்துவதன் மூலம் சீனாவுடனான தற்போதைய வர்த்தக போரை ட்ரம்ப் தீவிரப்படுத்தியுள்ளார் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது. (ஐ)

# பாப்பரசர் பிரான்சிஸை மன்னர் சார்ள்ஸ் சந்தித்தார்



வத்திக்கான், ஏப். 12

பாப்பரசர் பிரான்சிஸை பிரிட்டன் மன்னர் சார்ள்ஸ், மகாராணி கமீலா ஆகியோர் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர்.

மன்னர் சார்ள்ஸ் 4 நாள் அரச பயணமாக இத்தாலி சென்றுள்ளார். இதன்போதே, இருவரும் வத்திக்கானுக்கு சென்று பாப்பரசரை சந்தித்தனர்.

உடல்நலன் பாதிக்கப்பட்டிருந்த பாப்பரசர் பிரான்சிஸ் அண்மையிலேயே மருத்துவ சிகிச்சை பெற்று வத்திக்கான் திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹெலிகொப்டர் ஆற்றில் விழுந்து 3 சிறார் உட்பட 6 பேர் உயிரிழப்பு



நியூயோர்க், ஏப். 12

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஹட்சன் ஆற்றில் ஹெலிகொப்டர் விழுந்ததில் அதில் பயணித்த 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க நேரப்படி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுற்றுலா ஹெலிகொப்டர் ஒன்று பறந்து கொண்டிருந்தது. அது, ஹட்சன் ஆற்றின் மீது பறந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக திடீரென ஆற்றில் விழுந்தது.

இதில், ஹெலியில் பயணித்த 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

இறந்தவர்களில் விமானியுடன் ஸ்பெயின் நாட்டின் சீமன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் அகஸ்டின் எஸ்கோபார், அவரின் மனைவி மற்றும் 3 பிள்ளைகளாவர் என்று ஊடக செய்திகள் கூறுகின்றன. ஆனால் இதை இன்னும் அரசு உறுதிப்படுத்தவில்லை.

ஹெலிகொப்டர் புறப்பட்ட 18 நிமிடங்களிலேயே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்து குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க விமான போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. (ஐ)

# கேளிக்கை விடுதியின் கூரை இடிந்ததில் 218 பேர் மரணம்!

சாண்டோ டொமிங்கோ, ஏப். 12


இரவுநேர கேளிக்கை விடுதியின் கூரை இடிந்து விழுந்ததில் 218 பேர் உயிரிழந்தனர். 160இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கரீபியன் தீவு நாடானா டொமினிகன் குடியரசு நாட்டின் முக்கிய நகரமான சாண்டோ டொமிங்கோவில் கேளிக்கை விடுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புதன்கிழமை இரவு அங்கு இசைக் கச்சேரி நடைபெற்றது. பிரபலங்கள் உட்பட ஏராளமானவர்கள் அங்கு கூடியிருந்தனர். அப்போது, விடுதியின் மேற்கூரை இடிந்து விழுந்தது.

இதில், சிக்கி பலர் உயிரிழந்தனர். மீட்பு பணிகள் தொடர்ந்து வரும் நிலையில், நேற்று காலை வெளியான தகவலின் படி 218 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

160இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



இறந்தவர்களில் மாண்டேகிறிஸ்டி மாகாண கவர்னர் நெல்சி குரூஸ், முன்னாள் மேஜர் லீக் பேஸ்பால் வீரருமான ஆக்டேவியோ டோட்டல் (வயது 51) ஆகியோரும் அடங்குவர். (ஐ)

# ஷேக் ஹசீனா உட்பட 17 பேருக்கு பிடியாணை

டாக்கா, ஏப். 12

ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, அவரின் மகள் சைமா வாஜித் புதுல் மற்றும் 17 பேருக்கு எதிராக பங்களாதேஷ் நீதிமன்றம் மீண்டும் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, அவருடன் பணியாற்றிய அரசியல் தலைவர்கள், அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் சிலர்மீது மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்கள், தலைமறைவு குற்றச்சாட்டின் கீழ் பங்களாதேஷின் சர்வதேச குற்றங்கள் தீர்ப்பாயம் ஏற்கெனவே பிடியாணை பிறப்பித்துள்ளது.




இந்நிலையில் பங்களாதேஷ் ஊழல் தடுப்பு ஆணையம் ஷேக் ஹசீனா மற்றும் அவரின் மகள் சைமா வாஜித் புதுல் மற்றும் 17 பேர் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. சட்டவிரோதமாக காணி வாங்கியமை, பங்களாதேஷின் தந்தை என அழைக்கப்பட்ட ஷேக் முஜிபூர் ரகுமானின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்துக்கு 4 ஆயிரம் கோடி டாகா (இலங்கை மதிப்பில் சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய்) வீண் செய்ததாகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, அவரின் மகள் உள்ளிட்ட 17 பேருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட புரட்சியை தொடர்ந்து ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். அவரின் மகள் சைமா டில்லியில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய மண்டலத்தின் இயக்குநராக பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஷ்ய வெற்றி தின விழாவுக்கு இந்திய பிரதமருக்கு அழைப்பு



மொஸ்கோ, ஏப். 12

வரும் மே மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள ரஷ்ய வெற்றி தின விழாவில் பங்கேற்க இந்திய பிரதமருக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 1941ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற இரண்டாவது உலக போரில் ஜேர்மனியும் அப்போதைய சோவியத் ஒன்றியமும் மோதின. பின்னர் 1945ஆம் ஆண்டு சோவியத்திடம் ஜேர்மனின் நாஜி படைகள் சரணடைந்தன. இதன் 80ஆவது ஆண்டு தின விழாவை மே 9ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்கவே இந்திய பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியிடம் வீழ்ந்தது பெங்களூரு அணி!




பெங்களூரு, ஏப். 12

கே. எல். ராகுலின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் பெங்களூரு அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 24ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி வெற்றி பெற்றது.

பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் அக்சர் பட்டேல் முதலில் பந்து வீச முடிவு செய்தார்.

பெங்களூரு அணிக்காக கோலி மற்றும் பிலிப் சால்ட் இணைந்து ஆட்டத்தை தொடங்கினர்.


கோலி 14 பந்துகளில் 22 ஓட்டங்கள், சால்ட் 17 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆனார். 4 ஓவர்களில் 62 ஓட்டங்கள் எடுத்தது பெங்களூரு. சிறப்பான தொடக்கம் கிடைத்தும் அந்த அணி அதை தக்க வைத்துக் கொள்ள தவறியது.

பின்னர் வந்த தேவ்தத் படிக்கல், கோலி, லிவிங்ஸ்டன், ஜிதேஷ் சர்மா, ரஜத் பட்டிதார், குருணல் பாண்ட்யா ஆகியோர் சீரான இடைவேளியில் விக்கெட்டை இழந்தனர்.

இருப்பினும், இறுதி ஓவர்களில் அதிரடியாக ஆடிய ரிம் டேவிட், 20 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்தார். 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை அவர் விளாசி இருந்தார்.

இதன் மூலம் 20 ஓவர்களில் 163 ஓட்டங்கள் எடுத்தது பெங்களூரு அணி. டில்லி தரப்பில் விப்ராஜ் மற்றும் குல்தீப் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர். முகேஷ் குமார் மற்றும் மோஹித் சர்மா தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

164 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இறங்கிய டில்லி அணிக்கு டு பிளெஸிஸ், ஜேக் பிரேசர் தொடக்கம் கொடுத்தனர். ஆனால், முதல் ஓவரில் ஒருவரும், அடுத்த ஓவரில் மற்றவருமாக ஆட்டமிழந்தனர். அடுத்து இறங்கிய அபிஷேக் பொரெல் ஏழு ஓட்டங்களுடன் வெளியேறவே, கே.எல்.ராகுல் கடைசி வரை நின்று ஆடி 93 ஓட்டங்களை விளாசினார். அக்சர் பட்டேல் 15 ஓட்டங்கள், டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 38 ஓட்டங்கள் என 17.5 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டியது. இதனால், 6 விக்கெட்களால் பெங்களூருவை வீழ்த்தியது டில்லி. (ஐ)



## ஒலிம்பிக் கிரிக்கெட்டில் 6 அணிகளுக்கே அனுமதி

புதுடில்லி, ஏப். 12

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது. இந்த ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 128 வருடங்களுக்குப் பிறகு கிரிக்கெட் விளையாட்டு ஒலிம்பிக்குக்கு திரும்பி உள்ளது.

இந்நிலையில், போட்டி அமைப்பாளர்கள் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டில் 6 அணிகள் மட்டுமே கலந்து கொள்ளும் என உறுதி செய்துள்ளனர். ஆடவர் பிரிவில் 6 அணிகளும், மகளிர் பிரிவில் 6 அணிகளும் கிரிக்கெட் விளையாட்டில் கலந்து கொள்ளும்.

சர்வதேச கிரிக்கெட் சபையில் (ஐ. சி. சி) இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உட்பட 12 முழுநேர உறுப்பு நாடுகள் உட்பட 94 நாடுகள் இணை உறுப்பினர்களாக உள்ளன.

போட்டியை நடத்தும் நாடானா அமெரிக்கா ஒலிம்பிக்கில் பங்கேற்கும். அதேநேரம், ஏனைய 5 நாடுகள் விரைவில் தெரிவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இனி சென்னை அணியை டோனியே வழிநடத்துவார்



சென்னை, ஏப். 12


நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மீதமுள்ள போட்டிகளில் மகேந்திரசிங் டோனியே அணியை வழிநடத்துவார் என்று அந்த அணியின் தலைமை பயிற்றுநர் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ. பி. எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ருதுராஜ் தலைமை தாங்குகிறார். இந்நிலையில், நடந்து முடிந்த 5 போட்டிகளில் ஒன்றில் மட்டுமே சென்னை வெற்றி பெற்றுள்ளது. இதனால், அந்த அணி புள்ளிப்பட்டியலில் 9ஆவது இடத்திலுள்ளது.

இந்த நிலையில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ருதுராஜ் காயமடைந்தார். அவருக்கு முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனால், அவர் தொடரிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் நேற்று நடந்த கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணிக்கு டோனியே தலைமை தாங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, 235 போட்டிகளில் சென்னை அணிக்கு டோனி தலைமை தாங்கியுள்ளார். அத்துடன், 5 தடவைகள் இவரின் தலைமையிலேயே சம்பியன் பட்டத்தையும் சென்னை வென்றது. 2022 தொடரிலும் ஜடேஜாவின் விலகலை தொடர்ந்து டோனியே ஏனைய போட்டிகளுக்கு தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## கோலி புதிய சாதனை

பெங்களூரு, ஏப். 12

ஐ. பி. எல். வரலாற்றில் ஆயிரம் பௌண்ட்ரிகளை அடித்த முதல் வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார்.

ஐ. பி. எல். ரி -20 போட்டியின் 18ஆவது தொடர் நடக்கிறது. இதில், ராஜஸ்தானுக்கு எதிராக பெங்களூரு நேற்றுமுன்தினம் களமிறங்கியது.

இதில், பெங்களூரு அணிக்காக களமிறங்கிய கோலி ஒரு பௌண்ட்ரி அடித்த நிலையில் புதிய சாதனையை படைத்தார். அதாவது, ஐ. பி. எல். வரலாற்றில் ஆயிரம் பௌண்ட்ரிகளை அடித்த ஒரே வீரர் என்ற பெருமையை அவர் படைத்துள்ளார்.

920 பௌண்ட்ரிகளுடன் தவான் 2ஆவது இடத்திலும், 768 பௌண்ட்ரிகளுடன் வோர்ணர் 3ஆவது இடத்திலும் உள்ளனர். (ஐ)

## ராஜஸ்தானுக்கு அபராதம் விதிப்பு



ஜெய்ப்பூர், ஏப். 12

ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சனுக்கு 81 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதே நேரம், அணியின் ஏனைய வீரர்களுக்கு போட்டி தொகையில் 25சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். தொடரில் குஜராத்துக்கு எதிரான போட்டியில் 58 ஓட்டங்களால் ராஜஸ்தான் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில், பந்து வீசுவதற்கு அதிக நேரம் எடுத்தமைக்காக சஞ்சு சாம்சனுக்கு போட்டி ஊதியத்திலிருந்து 24 இலட்சம் இந்திய ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 81 இலட்சம் ரூபாய்) அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தத் தொடரில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதாக ராஜஸ்தான் அணிக்கு அபராதம் விதிக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும். இதனால், விளையாடும் பதினொருவர் அணிக்கும் இம்பக்ட் பிளேயர் விதியில் களமிறங்கிய வீரருக்கும் 25 சதவீதம் அல்லது 6 இலட்சம் ரூபாய் இந்த இரண்டில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலஞ்சம்...

மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்கு பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், சாமர சம்பத்துக்கு எதிரான இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பல விடயங்களை அறிந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதையடுத்து, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 06இல்)

## பிரதமர்...

இந்த இரு கூட்டங்களி லும் அமைக்கப்பட்ட மேடை மற்றும் சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டமை விதிமீறல் என்று முறையிடப்பட்டிருந்தது.

இதையடுத்து, அந்த இடங்களுக்கு சென்ற மாவட்ட தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் ஆலய நிர்வாகங்கள், கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதன்படி, ஆலய சூழலில் மேடை அமைத்தல் மற்றும் சுற்றுப்புறத்தில் தேர்தல் சின்னங்களை காட்சிப்படுத்தக் கூடாது. இதனை ஆலய நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், பிரதமருடன் எந்தவொரு வேட்பாளரும் பிரசன்னமாகக்கூடாது - இதனை கூட்ட ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தனர். (ஐ)

## வடக்கு...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வளமான மற்றும் ஒன்றுபட்ட நாட்டில் மதம் மற்றும் கலாசார சுதந்திரத்தை உறுதி செய்வது நம் அனைவரின் பொறுப்பாகும். மத மற்றும் கலாசார பன்முகத்தன்மை கொண்ட நாடு என்ற வகையில், மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான இத்தகைய சிறப்புமிக்க இடங்களை எந்தவித அடக்குமுறையும் இல்லாமல் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பிரதமரின்...

பங்கேற்றார்.

பிரதமரின் வருகையையொட்டி ஆலய சூழலில் பெருமளவு பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், பிரதமரின் பாதுகாப்பு பிரிவினருடன் படைத் தரப்பினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு ஆலய சூழலில் குவிக்கப்பட்ட படைத் தரப்பினர் ஆலய பூசகர்கள், பக்தர்களை உடல் சோதனைக்கு உட்படுத்திய பின்னரே ஆலய வளாகத்துக்குள் அனுமதித்தனர். இதனால், கும்பாபிஷேக நிகழ்வுக்கு வருகை தந்த பக்தர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இது குறித்து விசனங்களையும் வெளியிட்டனர்.

இதேநேரம், படைத் தரப்பினர் புனித பிரதேசமான ஆலய சூழலில் சப்பாத்துக்களுடனேயே நடமாடியமை பக்தர்களிடையே அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆலயத்துக்கு வருகை தந்த பிரதமரிடம் மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இதையடுத்து, சோதனை நடவடிக்கைகள் குறைத்துக் கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைச்சர்...

அமைச்சர் விஜித ஹேரத் மானிப்பாய், சாவகச்சேரி உட்பட பல்வேறு இடங்களில் மக்கள் சந்திப்புகளில் பங்கேற்பார் என்றும் தெரிய வருகின் றது.

நேற்றைய தினம் பிரதமர் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய நிலையில் இன்றைய தினம் விஜித ஹேரத்தின் வருகை அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாம்...

- என்று கருணா என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கருணா தரப்பு இடையே வெருகலில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் சிவப்பு சித்திரை நிகழ்விலேயே அவர் மேற்கண்டாவறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறுகையில்,

அன்று போராட்டத்தில் வீணான உயிரிழப்புகளை தவிர்த்து, இராஜதந்திர ரீதியாக பேச்சு ஊடாக எங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் நான் உட்பட பேச்சில் ஈடுபட்டிருந்தோம். ஒஸ்லோ பேச்சில் சமஷ்டி முறை தீர்வை பெற வாய்ப்பு கிடைத்தது. இதன் அடிப்படையில் சமஷ்டி உடன்படிக்கையிலே கைச்சாத்திட்டதன் பிரகாரம் தவறாக புரிந்து கொண்ட தலைமைத்துவம் பிழையான கண்ணோட்டத்தில் பார்வையிட்டது. ஆகவே, மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடக்கி வைத்து உயிரிழப்பை ஏற்படுத்த விரும்பவில்லை.

வடக்கு போராளிகளாயினும் கிழக்கு போராளிகளாயினும் சரி பெருந்தொகையான போராளிகளை நாம் இழந்தோம். ஆகவே, உயிரிழப்பை தவிர்க்க முற்பட்டவேளையில்தான் எங்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டது. இதன் போது தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதனால், யுத்தத்தில் இருந்து ஒதுங்கியிருந்தோம். எங்கள் போராளிகள் நிராயுத பாணிகளாக யுத்தத்தில் ஈடுபடாமல் ஆயுதங்களை ஒப்படைத்து வீடு திரும்பப் பணித்தோம். அந்த வேளையில்தான் வன்னியிலிருந்து வந்த புலிகள் கிட்டத்தட்ட 500 போராளிகளை சுட்டுகு - கொலை செய்தனர். இது மதிப்புக்குரிய தேசிய தலைவருக்கு தெரிந்து நடந்ததா, தெரியாமல் நடந் ததா என்பது வேறு விடயம். இதனை நான் அறியேன்.

ஆனால், இங்கு நடந்த கொடுமைகளை நாங்கள் மறக்க முடியாது. தலைவரை காப்பாற்ற வன்னிக் கள முனைகளில் இருந்த தளபதிகள் பலர் சரணடைந்த பிற்பாடும் உயிருடன் எரியூட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இது போன்ற வேதனையான, கொடுமையான விடயங்கள் எல்லாம் நடந்தேறின.

அன்று நாங்கள் விலகியிருந்தமை நாங்கள் காட்டிக் கொடுப்பதற்கோ துரோகம் செய்வதற்கோ அல்ல. மாறாக ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக ரீதியாக போராட வேண்டும் என்றே. ஆனால், அந்தக் காலத்திலே இருந்த ஊடகங்கள் அதனை திரிபுபடுத்தி கிழக்கு மாகாணத்தில் உள்ள போராளிகள் அனைவரும் துரோகிகள் என்ற பட்டத்தை சூட்டி தேவையற்ற பிரசாரங்களை மேற்கொண்டன.

இன்று பல போராளிகள் தளபதிகள் உலக நாடுகளில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதனை நிச்சயம் புரிந்திருப்பார்கள். கிழக்கு மாகாண போராளிகள் யாராவது துரோகியாக இருந்திருந்தால் வன்னி போர் களத்தில் இருந்த இராணுவ முகாம்களில் நின்றிருப் பார்கள். ஆகவே, ஒரு போராளியாவது அவ்வாறு செயல்பட்டிருந்தால் அவர் கள் அதனை நிரூபிக்கட்டும். அதன் பிற்பாடு நாங்கள் இந்த கருத்தை மீளப் பெறுகிறோம் - என்றார். (ஐ)

# காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாபிலவு மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஏப். 12

தமது காணிகளை உடன் விடுவிக்கக் கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மாவட்ட செயலகத்துக்கு சென்று மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரனை சந்தித்து தமது காணிகளை உடனடியாக விடுவிக்க ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றும் கோரிக்கை விடுத்தனர்.

கேப்பாபிலவை சேர்ந்த 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் காணிகள் இன்னமும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்றும் இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலையில் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்தும் சேவை மே 1 இல் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 12

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து செயல்படுத்தப்படுமென அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்படி, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது கடன் அட்டை மற்றும் வங்கி அட்டைகளை பயன்படுத்தி பணம் செலுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொட்டாவ மற்றும் கடவத்த சந்திப்புகளில் இதன் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (அ)

## புதுவருடத்தின்...

தொடர்பான கலந்துரையாடல்களை தேசிய மக்கள் சக்தியின் தாய் கட்சியான ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வழிநடத்தி வருகிறார் எனவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## வெருகல்...

நினைவுதினம் இடம் பெற்றதாகவும் அதில் முதல் தடவையாக கருணா கலந்துகொண்டார் எனவும் ஊடகப் பரப்பில் செய்திகள் வந்தன.

இந்த மோதல் ஏற்பட பிரதான காரணகர்த்தா கருணாதான். 2004, மார்ச், 03இல் விடுதலை புலிகளில் இருந்து தாம் விலகிவிட்டதாக ஊடகத்தில் கருணா அறிவித்தார். 2004 மார்ச் 06 இல் விடுதலைப் புலிகளில் இருந்து கருணாவை நீக்கிவிட்டதாகவும் அவருக்கும் விடுதலை புலிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் ஊடகங்களில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதன்பின்னர் தாம் கிழக்கு புலிகள், வன்னி புலிகள், என்ற பிரதேசவாத கருத்தை கருணா தரப்பினர் பரப்பி மட்டக்களப்பு நகர்பகுதி, செங்கலடி பகுதி எங்கும் யாழ்ப்பாண வர்த்தகர்கள், பொதுமக்கள் மீது பிரதேச வாதக் கருத்தை பரப்பி அவர்களை வெளியேற்றும் காடைத்தனத்தை புரிந்தனர்.

2004 ஏப்ரல் 04 பாராளுமன்ற பொதுத்தேர்தல் முடியும் வரை விடுதலைப் புலிகள் கருணா குழுமீது எந்த நடவடிக்கையையும் செய்யவில்லை. 2004 ஏப்ரல் 09, இரவு தொடக்கம் 2004 ஏப்ரல் 10 வரை வாகரைக்கும், வெருகல் பாலத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் கருணா தரப்பை சேர்ந்த போராளிகள் சிலர் உயிரிழந்தனர்.

2004 ஏப்ரல் 20இல் கிளிநொச்சியில் தலைமைச் செயலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், புலானாய்வு பொறுப்பாளர் பொட்டம்மான் மற்றும் புலிகளின் தளபதிகள் உள்ளிட்டவர்கள் 22, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பை ஏற்படுத்தினர்.

அதுதான் 22, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தலைவரின் முதல் சந்திப்பு. இந்த சந்திப்பின்போது நான் தலைவரிடம் கேட்டேன், "கடந்த 2004 ஏப்ரல் 10ஆம் திகதி கருணா குழுவினருடன் இடம்பெற்ற மோதலில் கருணா தரப்பில் மரணித்த போராளிகளை மாவீரர் பட்டியலில் இணைக்கவேண்டும். ஏனெனில், அவர்கள் இனவிடுதலைக்காக போராடவே இயக்கத்தில் இணைந்தார்கள் அவர்களை தவறாக கருணாதான் பயன்படுத்தினார்", என்றேன்.

தலைவர் பதில் கூறுவதற்கு முன்னம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் என்னிடம் கூறினார், "அண்ணர் இந்த விடயங்களை எல்லாம் நாம் இங்கு கேட்கக் கூடாது", என்றார்.

அப்போது உடனே தலைவர் தமது கையால் செ. கஜேந்திரனை பேசவேண்டாம். என சைகை காட்டிவிட்டு "அரியம் அண்ணர் கேட்டதில் என்ன தவறு உள்ளது அந்த போராளிகள் இன விடுதலைக்காகத்தானே போராட்டத்தில் இணைந்தவர்கள் அவர்களை தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்பது உண்மை. அரியம் அண்ணர் கேட்டது சரி - அந்த போராளிகள் அனைவரையும் மாவீரர் பட்டியலில் இணைத்துக் கொள்கிறேன்" என்றார்.

இந்த செய்தி மறுநாள் கிளிநொச்சியில் இருந்து வெளிவந்த ஊடகங்களில் வெளியிடப்பட்டது. கடந்த 21 வருடங்களாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியால் வெருகல் படுகொலை என்ற பெயரில் இதனை நினைவுகூருகிறார்கள். ஆனால், இந்த உயிர் நீத்த அத்தனை போராளிகளும் தலைவரின் கட்டளைப்படி மாவீரர் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டு கார்த்திகை 27, இல் மாவீரர் தினநாளில் அவர்களுக்காகவுமே தீபச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப் படுகிறது என்பதே உண்மை. "வெருகல் படுகொலை" என வேறுபடுகொலை தினம் உண்டு.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் உள்ளவர்களுக்கு தெரியாது என நினைக்கிறேன். திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் 1986, காலப்பகுதியில் முதன்முதலாக ஓர் இடப்பெயர்வு இடம்பெற்று ஈச்சலம்பற்றுவில் ஒரு அமைக்கப்பட்டிருந்து.

அந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை 1986 ஜூன்,12 அன்று சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும் போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் இராணுவம் மற்றும் ஆயுததா ரிகளால் படுகொலை செய்யப்பட்டி ருந்தார்கள் அந்த படுகொலையையே "வெருகல் படுகொலை" என நினைவு கூருவது குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கைத்துப்பாக்கியுடன் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஏப். 12

மைக்ரோ ரக கைத்துப்பாக்கியுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒருவரை வழியனுப்பி வைப்பதற்காக சென்றபோதே குறித்த வர்த்தகர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த 41 வயதான நபர் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு வடக்கு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# தேர்தல்களைவிட தேசத்தின் பாதுகாப்புக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும்!

## பலாலி வீதி திறப்பு குறித்து நாமல்

கொழும்பு, ஏப். 12

**தேர்தல்களை விட தேசத்தின் பாதுகாப்பிற்கே அரசாங்கம் முன்னுரிமையளிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பலாலி வீதி திறக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடபகுதி மக்களின் உணர்வுகளுடன் அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதை தேசிய மக்கள் சக்தி கைவிடவேண்டும்.

பலாலி வீதியை கடுமையான கட்டுப்பாடுகளுடன் அரசாங்கம் திறக்க தீர்மானித்துள்ளமை உண்மையாகவே கரிசனையளிக்கின்றது.

அந்த வீதி பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டபோதிலும் அரசாங்கம் பாதுகாப்பு சரி பார்ப்பில் ஈடுபடாமல் இந்த வீதியை திறந்துள்ளது. இதன் காரணமாகவே கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது அனைத்துவகையான அச்சுறுத்தல்களையும் புறக்கணித்து தேர்தலில் வாக்குகளை பெறுவதற்கான முயற்சி போல தோன்றுகின்றது. இவ்வாறான விடயங்களை செய்யவேண்டாம், என அரசாங்கத்தை வலியுறுத்தும் நான் தேர்தல்களை விட தேசத்தின் பாதுகாப்பிற்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

வீதியை திறக்கவேண்டும் என்றால் முழுமையான பாதுகாப்பு சரிபாப்பிற்கு பின்னரே அதனை திறக்கவேண்டும். மேலும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு எந்தவித தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத வகையில் அதனை திறக்கவேண்டும்-என்றார். (அ)

# உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதே சமூகமயப்பட்ட அரசியலுக்கு அடித்தளம்!

## கூறுகிறார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, ஏப். 12

அரசியற் தளத்தின் அடிப்படை அலகுகளாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களை வென்றெடுப்பதன் மூலமே, எமது மக்களின் அடிப்படை வாழ்வியலையும், அது சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளையும் கட்டமைக்க முடியும். அத்தகைய சமூகமயப்பட்ட அரசியலுக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய உளளூராட்சி மன்றங்களை இம்முறையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில், கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட அக்கராயன் வட்டாரத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து, கட்சியின் வட்டாரக்கிளைத் தலைவர் சுந்தரலிங்கம் கயூரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அக்கராயன் பிரதேச ஆதரவாளர்கள் பலரின் பங்கேற்போடு நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், சபையின் மேனாள் உறுப்பினரான சுந்தரமூர்த்தி தயாபரன், கட்சியின் அக்கராயன் வட்டார வேட்பாளர் தட்சணாமூர்த்தி முரளி, வன்னேரிக்குளம் வட்டார வேட்பாளர் நாகேந்திரம் செல்வநாயகம், கணேசபுரம் வட்டார வேட்பாளர் யோகேஸ்வரன் நிரோயன், அக்கராயன் வட்டாரக்கிளை உறுப்பினர் உஷா சதீஸ்குமார், வட்டாரக்கிளையின் செயலாளர் மருதலிங்கம் யூட் அன்ரனி உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாடு மீது மோதிய கார்!

கொழும்பு, ஏப். 12

பசறை - பதுளை வீதியில் பெல்கஹதென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் மாடு ஒன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்று வீதியில் பயணித்த மாடு மீது மோதியதில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான காரின் சாரதி பலத்த காயங்கள் இன்றி உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய மக்கள் சக்தியினரின் மக்கள் சந்திப்பு காரைநகரில்

யாழ்ப்பாணம், ஏப். 12

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பு, யாழ்ப்பாணம் காரைநகர் கதிர்காம சுவாமி முருகன் கோவிலில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்த சந்திப்பை தொடர்ந்து, வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலைய முன்றல், கோப்பாய் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில், பருத்தித்துறை கொட்டடி கடற்கரை ஆகியவற்றிலும் மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்றன. (அ)

# 16 அடி கற்பக விநாயகர் சிலையுடன் அமைகிறது முதல் விநாயகர் ஆலயம்!



கொழும்பு, ஏப். 12

புஸல்லாவையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஸ்ரீ மகா கணபதி ஆலயத்துக்குரிய, 16 அடி உயரமான கற்பக விநாயகர் சிலை, பிரதிஷ்டை செய்வதற்காக நேற்று ஆலய வளாகத்தை வந்தடைந்தது.

16 அடி உயரம்கொண்ட கற்பக விநாயகம் சிலையுடன் அமையும் முதல் ஆலயம் இதுவாகும் என கூறப்படுகின்றது.

குறித்த சிலை தமிழகம் பிள்ளையார்பட்டி வளாகத்தில் செதுக்கப்பட்டதாகும். பிள்ளையார்பட்டி ஆலய குகை வரதர் பிள்ளையார் சிலைக்கு நிகராகவே இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம், வழிபாட்டுக்கான பிள்ளையாருக்கான சன்னிதானம் எழுப்பப்பட்டு, அதற்கான கும்பாபிஷேகமும் நடைபெற்றது. (அ)

# அமெரிக்க வரியினால் இலங்கைக்கு பாதிப்பு!

கொழும்பு, ஏப். 12

அமெரிக்க அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட 44 சதவீதப் பரஸ்பர வரியால் இலங்கை பாதிப்படையும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொழும்பைத் தளமாகக் கொண்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் சரியான மதிப்பீடுகள் சில மாதங்களின் பின்னரே அறியப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

“உண்மையான தாக்கம் அடுத்த ஆண்டு உணரப்படும் என கருதுவதாக” ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்டப் பொருளாதார நிபுணர் லிலியா அலெக்சன்யன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் எதிர்வரும் ஜூலை மாதம் புதுப்பிக்கப்படவுள்ள இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பான புதிய அறிக்கையில் இந்த தரவுகள் வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வளர்ச்சி அடைந்து வரும் ஆசிய நாடுகளுக்கு அமெரிக்காவின் வரி கடினமான ஒன்றாகும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்டப் பொருளாதார நிபுணர் லிலியா அலெக்சன்யன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் வரி அறிவிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை உட்பட 5 ஆசிய நாடுகள் அடங்குகின்றன.

தற்போதுள்ள நிலையில் அமெரிக்க ஏற்றுமதிகளுக்கான போட்டித்தன்மை குறைவடையும் அதேவேளை, அங்கிருந்து கிடைக்கப்பெறும் முன்பதிவுகளும் ரத்து செய்யப்படலாம்.

ஏற்றுமதியாளர்களுக்கு இலாப இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதுடன் அது வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் தாக்கம் செலுத்தும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்டப் பொருளாதார நிபுணர் லிலியா அலெக்சன்யன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளம் பிறிதொரு நாளில் கிடைக்கும்!

கொழும்பு, ஏப். 12

அரச ஊழியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை நேற்று முன் தினம் வழங்க முடியாத நிறுவனங்களுக்கு சம்பளத்தின் நிலுவைப்பணத்தை வழங்குவதற்காக பிறிதொரு திகதியை அறிவித்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டாரவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அரச ஊழியர்களுக்கான திருத்தப்பட்ட சம்பளம் நேற்று முன் தினம் வழங்கப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை நேற்று முன் தினம் வழங்க இயலாத நிறுவனங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போதுள்ள சம்பளத்தைச் செலுத்தவேண்டும்.

புதிய சம்பள திருத்தத்திற்கமைய நிலுவைத் தொகையை எதிர்வரும் 25 ஆம் திகதி செலுத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் எதிர்வரும் ஜூலை முதல் வழங்கப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உளளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org